செய்தி வெளியீடு எண். 825 27.09.2010

# தஞ்சை மாவட்டம் திங்களூர் சந்திரன் கோவில், அரசூர் அகஸ்தீஸ்வரர் கோவில், தஞ்சாவூர் இராஜகோபாலசுவாமி கோவில்களில் அரசு செயலர் திடீர் ஆய்வு

தஞ்சாவூர் மாவட்டம், திங்களூர் சந்திரன் கோவில், அரசூர் அகஸ்தீஸ்வரர் கோவில், தஞ்சாவூர் மேலவீதி இராஜகோபாலசுவாமி கோவில், ஆகிய கோவில்களில் நடைபெற்றுவரும் பணிகளை தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள், மற்றும் செய்தித்துறை அரசு செயலர், ஆர்.சிவக்குமார் திடீர் ஆய்வு செய்தார்.

அரசூர் அகஸ்தீஸ்வரர் கோவிலில் ரூ.20இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் சுற்றுச்சுவர் பணிகள் நடைபாதை அமைக்கும் பணிகள் மற்றும் மறு சீரமைப்பு பணிகளை பார்வையிட்ட அரசு செயலர் ஆர்.சிவக்குமார் இ.ஆ.ப அவர்கள் பணிகள் தரமாகவும், விரைவாகவும் முடிக்க உத்தரவிட்டார். நடைபெறும் பணிகளை பொறியாளர்கள் கவனமாக பார்வையிட்டு எந்தவிதத்திலும் குறைபாடு இல்லாமல் முடிக்க அறிவுரை வழங்கினார்.

திங்களூர் சந்திரன் கோவிலில் ரூ.40 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்ட அரசு செயலர் கோவில் வளாகங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருந்து வரும் பக்தர்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் வழங்க அறநிலையத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உத்தரவிட்டார். கோவில் வாசலில் உள்ள அரசமரத்தின் அடியில் சிமெண்ட் மேடை அமைத்து பக்தர்கள் இளைப்பாறவும், கோவில் சுற்றுச்சுவர் அமைத்து அதன் அருகிலேயே கடைகள் அமைக்கவும், கோவிலுக்கு வரும் வாகனங்களுக்கு தகுந்த இடவசதிகளை அமைத்துக் கொடுக்கவும் புதிதாக நவீன கழிப்பிடங்கள் அமைக்கவும், அறநிலையத்துறை அலுவலர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

கோவில் அருகில் கட்டப்பட்டுள்ள மண்டபத்தில் விரைவாக அடிப்படை வசதிகள் செய்து பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர உத்தரவிட்டார்.

ரூ.50 இலட்சம் மதிப்பில் தஞ்சாவூர் மேலவீதி இராஜகோபாலசுவாமி புனர் அமைப்பு பணிகளை பார்வையிட்ட அரசு செயலர் பணிகளை விரைவாக முடிக்க ஆலோசனை வழங்கினார். அரசு செயலர் உடன் அறநிலையத்துறை இணை ஆணையர் மா.கவிதா, உதவி பொறியாளர் கோபாலன், உதவி ஆணையர் த.கஜேந்திரன், செயல் அலுவலர் டி.கோவிந்தராஜன் கணக்கர் கண்ணன் ஆகியோர் உடன் சென்றனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9